In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.8 |
| Name: Ramalingam | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 27-01-2025.

**(Accused absent, petition u/s 355 BNSS filed and allowed.)**

முதல் விசாரணை :-

நான் கொடைரோட்டில் குடியிருக்கிறேன். டிரைவராக பணியாற்றுகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் வந்து என்னை விசாரிக்கவில்லை.எதிரி ராம்குமாரை எனக்கு தெரியாது. அவர் என் முன்னிலையில் எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.5. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ.6. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டேன். வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-

மறு விசாரணை - (அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 17.05.2020 ம் தேதி 11 மணிக்கு கொடைரோடு தளி பாலம் அருகே நான் வரும்போது எதிரிகள் ராம்குமார் மற்றும்

செந்தில்குமார் ஆகியோர்களை கண்ணன் மற்றும் என் முன்பாகவும் எதிரிகளை கைது செய்தார் என்றும் அப்போது எதிரி ராம்குமார் எங்கள் இருவரது முன்பாக எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை தன்னை கூட்டிச்சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார் என்றும் அதன் அடிப்படையில் 17.05.2020ம் தேதி 12 மணிக்கு திண்டுக்கல் மதுரை NH–7 ரோட்டில் பாலாஜி பவன் ஓட்டல் அருகே உள்ள ராயல் மனமகழ் மன்றத்தில் மறைத்து வைத்திருந்த சுமார் 42 செ.,மீ. நீளமுள்ள அதில் இரும்பு பாகம் சுமார் 31 செ.மீ. கைப்பிடி நீளம் சுமார் 11 செ.மீ. நீளமுள்ள பித்தளை பூண் போட்ட கத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் அதில் தானும் கண்ணனும் கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.27 16:35:55 +0530

Principal District Judge,
Dindigul.